





திருநீலகண்டநாயனார்
தில்லையில் தோன்றிய அடியார்களில் ஒருவர் திருநீலகண்டர் என்ற குயவனார். பாற்கடல் விஷத்தினை அமுதமாய் ஏற்ற சிவபெருமானின் திருக்கழுத்தாகிய திருநிலகண்டத்தையே போற்றி வந்தமையால் திருநீலகண்டர் என எல்லோராலும் அழைக்கப்பட்டார்.


திருநீலகண்டரும் அவர் மனைவியும் அடியார்களுக்கு பல தொண்டுகளை செய்து சிவ சிந்தனையுடன் வாழ்ந்து வருகின்றனர்


ஒருநாள் திருநீலகண்டர் வீட்டிற்குத் தாமதமாக வருகிறார்.
சுவாமி உணவருந்தும் வேளையும் கடந்து விட்டதே ஏன் தாமதம்?
அது வந்து... வந்து...



திருநீலகண்டரின் தயக்கத்தைப் பார்த்த அவர் மனைவி அவர் இன்பத்துறையில் எளியவராகி பிறர் மாதர்மீது மையல் கொண்டு சென்றதை உணர்ந்துக் கொண்டாள்.
என்னை மன்னித்துவிடு அன்பானவளே
இறைவனுக்கு இசைவில்லா இச்செயலால் பெரிதும் வருந்துகிறார் திருநீலகண்டர்.
திருநீலகண்டர் மனைவியைத் சமாதனம் செய்ய அவரைத் தொட நெருங்குகிறார்.
"தீண்டுவீராயின் எம்மை திருநீலகண்டம்"
எம்மை தொடுவீராயின் திருநீலகண்டத்தின் ஆணை அவரை தடுக்கட்டும் என்று மனைவி கூறினார்
நீவீர் எம்மை என்று கூறியமையால் உம்மை மட்டுமல்லாது வேறு எந்த மாதரையும் என் மனதினாலும் தீண்டமாட்டேன் இது திருநீலகண்டத்தின் மீது ஆணை.
திருநீலகண்டம்


அன்று முதல்...
இருவரும் தங்கள் சத்தியத்தை பிறர் அறியாமல் வாழ்ந்து வந்தனர், அன்பு குறையாமல் ஆனால் ஒருவரையொருவர் தீண்டாமல் மனதிலும் தூய்மையாக தாங்கள் செய்துவந்த சிவ பணிகளை தொடர்ந்து செய்து முதுமை பெறுகின்றனர்.
இவர்களின் தூய நெறியை உலகோருக்கு விளக்க சிவபெருமான் திருவுள்ளம் கொண்டார். ஒருநாள் அவர் சிவயோகி உருவம்கொண்டு திருவோட்டை ஏந்திக்கொண்டு இவர்கள் வீட்டிற்கு வருகிறார்.
அடியாரே வாருங்கள். நான் செய்யக்கூடிய பணிவிடை யாது.
சிவயோகியாக வந்த சிவபெருமான், திருநீலகண்டரிடம் ஒரு ஓடு ஒன்றைக் கொடுத்து


நம்பியே இதற்கு ஒப்பான ஓடு உலகில் இல்லை. பொன்னின் மணியைவிட மேலானது. ஆகையால் நன்முறையில் காக்கவேண்டியது உன் பொறுப்பு . நான் சில நாட்கள் கழித்து வாங்கி கொள்கிறேன்
அப்படியே ஆகட்டும்
சிவயோகி சென்றுவிட, திருநீலகண்டரிடம் அந்த ஓட்டை வீட்டில் உள்ள பெட்டி ஒன்றில் வைக்கிறார்.
இந்த ஓட்டை பெட்டியில் வைத்திருக்கிறேன் பத்திரமாக இருக்கும்
அப்படியே ஆகட்டும்
பலநாட்கள் சென்றன... இறைவன் திருவோட்டை மாயமாய் மறையச்செய்தார். பின்பு திருநீலகண்டரின் இல்லத்திற்கு அதே சிவயோகி வேடத்தில் வந்தார்.
அப்பனே நான் கொடுத்த திருவோட்டைப் பத்திரமாக வைத்திருக்கீறாயா? கொண்டு வாரும்
அப்படியே ஆகட்டும்


திருநீலகண்டர் வீட்டுப் பெட்டியிலும், அனைத்து இடங்களிலும் தேடிப்பார்த்து காணப்பெறாமல் கலங்கினார்.
இங்குதானே வைத்தேன்... ஓட்டை காணவில்லையே
நானும் எல்லா இடமும் பார்த்துவிட்டேன். காணவில்லை.
திருநீலகண்டர் கலக்கத்துடன் அடியாரிடம் வந்து...
ஐயன்மீர். நீவிர் கொடுத்த ஓட்டைக் காணவில்லை. மன்னிக்கவும். பதிலாக வேறு ஓடு தருகிறேன் பெற்றுக்கொள்ளவேண்டும்.
பொன்னிலும் மேலான என் ஓட்டை நீவிர் திருடி வைத்துக்கொண்டாய். ஓட்டை வாங்காமல் இங்கிருந்து செல்ல மாட்டேன்.
ஐயகோ! திருட்டு எண்ணம் எனக்கு சிறிதும் இல்லை ஐயா. என் உள்ளத்தை நிருபிக்க நான் என்ன செய்ய வேண்டும்
அப்படியானால் உமது மகனின் கையைப் பிடித்துக்கொண்டு குளத்தில் மூழ்கி சத்தியம் செய்யவும்


ஐயா தாங்கள் உறைத்தபடி செய்ய எனக்கு மகன் இல்லை
அப்படியானால் உன் மனைவியை பிடித்துக்கொண்டு குளத்தில் மூழ்கி சத்தியம் செய்
ஐயா மன்னிக்கவும் எங்களுக்குள் ஏற்பட்ட சபதத்தால் என் மனைவியின் கையை பற்ற இயலாமல் உள்ளேன். நானே நீரில் மூழ்கி சத்தியம் செய்கிறேன்.
இல்லை! நான் தில்லைவாழ் அந்தணர்கள் கூடியிருக்கும் ஊர் அவையில் சென்று வழக்குரைப்பேன்.
சிவயோகி தில்லைவாழ் அந்தணர்கள் உள்ள அவையில் முறையிடுகிறார்.இருவர் கூற்றையும் கேட்ட அந்தணர்கள்...
திருநீலகண்டரே! ஒட்டை காணாமல் செய்தததற்காக நீர், மனைவியுடன் குளத்தில் சத்தியம்செய்துதான் தீரவேண்டும்.
சரி, பொருத்தமான முறையில் நீரில் மூழ்கி சத்தியம் செய்கிறேன் வாருங்கள்


திருநீலகண்டர் மனைவியை அழைத்துக்கொண்டு திருப்புலீச்சீரம் கோயிலின் முன் உள்ள நீர்நிலையை அடைந்தார். ஒரு மூங்கில் தண்டை இரு ஓரங்களிலும் இருவருமாக பிடித்துக்கொண்டு நீரில் மூழ்க சென்றனர்
உம் மனையாள் கையைப் பிடித்து மூழ்குவீர்
ஐயா எங்களுள் ஒரு சத்தியம் உள்ளது


திருநீலகண்டர் முன்னர் நடந்த சூழுரையை அனைவரும் கேட்குமாறு கூறினார்.


பின்னர் மூங்கில் தண்டை இரு ஓரங்களிலும் இருவருமாக பிடித்துக்கொண்டு முழ்கினர்.


உங்கள் இருவரின் வைராக்கிய பக்தியை உலகிற்கு காட்டவே யாம் வந்தோம்.
நீர் இருவரும் இளமை நீங்காமலே எம்மிடத்தில் இருப்பீராக.